**OS**.**No**. 250/2017 **C/W OS No**.470/18

**DW** 1- கோவிந்தராஜ் த/பெ. வெங்கடபதி

நாள். 15.03.2023

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் சென்ற முறை விசாரணையில் 1ம் வாதி 31.3.2013 வரை வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளார் என கூறியஉள்ளது சரியல்ல என்றாலும் அது 31.3.2012 வரை என பதிவு ஆகியிருக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. 2012–13 வரை செலுத்தியுள்ளார். 1ம் பிரதிவாதி முன்னரே வெற்று காசோலைகளிலும் வெற்று தாள்களிலும் கையொப்பம் இட்டு கொடுத்தார் என்பதை எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்பது குறிப்பிடவில்லை என பதிவு ஆகியிருக்க வேண்டும் என்றால் ஞாபகம் இல்லை என தான் பதில் அளித்துள்ளேன். அதேபோல் 10.3.2023 தேதியில் நான் கொடுததாக கூறும் மூன்றுக்கு மேற்பட்ட புகாரில் என உள்ளதில் மூன்றுக்கும் மேற்பட்ட புகாரில் ஒன்றில் என பதிவு ஆகியிருக்க வேண்டும் என்றால் ஞாபகம் இல்லை என தான் சாட்சியம் அளித்துள்ளேன்.

2. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்கு மூலத்தில் 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் இருந்து 26.12.2013 லும் 17.6.2014 லும் 1ம் வாதி விலகியதாக விடுப்பு கடிதத்தினை 29.3.2016 ல் அனுப்பி வைத்தார் என சொல்லியுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. மேற்படி கடிதத்தின் நகல் எனக்கோ 1ம் பிரதிவாதிக்கோ அனுப்பட்டதோ என்றால் வந்தது. மேற்படி அவ்வாறு வந்த தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். 26.12.2013 தேதியில் 1ம் வாதி விலகியதாக 1ம் பிரதிவாதிக்கு நேரடியாக அனுப்பினாரா என்றால் மேற்படி தேதிகளில் வரவில்லை இரண்டு தேதிகளில் Left from the firm என குறிப்பிட்டு ஒரே கடிதம் தான் வந்தது.

3. 3ம் பிரதிவாதி நிறுவனத்தை கலைத்து விடலாம் என 1ம் வாதி 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு ஏதாவது அனுப்பியுள்ளாரா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.த.சா,ஆ 7 ஆனது திருப்பூர் நிட்சிட்டி பிரான்ஸ் இண்டயன் ஓவர்சீஸ்

வங்கி மேலாளருக்கு 1ம் வாதி அனுப்பிய கடிதம் என்றால் ஆமாம். அதில் ஸ்டாக் பேமெண்ட்க்கு என்ன காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் Dispute me and my partner அதில் I Unknownly singned in some letter heads and blank checks என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் காசோலை புத்தகம் அவரிடம் தான் இருந்தது. அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி கடிதம் 5.2.2014 தேதியது என்றால் ஆமாம். 1ம் வாதி அதேபோல் திருப்பூர் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஓவர்சீஸ் வங்கிக்கும் கடிதம் அளித்துள்ளார் என்றால் ஆமாம். மேற்படி இரு கடிதத்திலும் கொஞ்ச நாளைக்கு 3ம் பிரதிவாதியின் வங்கிக் கணக்கை நிறுத்தி வைக்குமாறு குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆமாம்.

4. 17.6.2014 ல் 1ம் வாதி என் மனைவியான 1ம் பிரதிவாதிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார் என்றால் ஆவணத்தை பார்த்தால் சொல்ல முடியும். மேற்படி கடிதம் 3ம் பிரதிவாதியின் தொழில் விலாசத்துக்கும் 1ம் பிரதிவாதியின் நிறந்தர குடியிருக்கும் முகவரிக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தை பார்த்த பின்பு நிறுவனததிற்கு வந்தது குடியிருப்புக்கு வந்ததா என்பது ஞாபகம் இல்லை என தெரிவித்தார். 17.6.2014 தேதிய கடிதமும் தொழில் நிறுவன முகவரியில் குறிப்பிட்டுள்ள ஒப்புதல் அட்டையும் வாதி தரப்பில் வா.த.சா 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கடிதத்தில் 2012 வரை வருமான வரி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும். 2012–13 க்கான வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதாக இருந்தால் 1ம் வாதிக்கு தெரியபடுத்தியும் அனுமதி பெற்றும் ஆடிட்டார் திரு.சேதுசுப்பிரமணி மூலம் தாக்கல் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார் என்றால் ஆமாம். ஆனால் அது தவறானது. 2012–13 க்கான வருமான அறிக்கையை வாதிகளே ஆடிட்டார் திரு.சேதுசுப்பிரமணி மூலம் தாக்கல் செய்துவிட்டார்கள். அவ்வாறு சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

5. 8.1.2014 ல் 3ம் பிரதிவாதி நிறுவன பெயரில் நான் தான் தனிநபர் நிறுவனமாக ஆரமித்தேன் என்றாலும் என்னுடைய மனைவி பெயரில் ஆரமித்தாக சொல்லியுள்ளது தவறானது என்றாலும் நான் Bloom knit Finishers என்ற பெயரில் தான் பெயரில் தான் ஆரம்பித்தேன். நானும் என்னுடைய மனைவியும் 3ம் பிரதிவாதி நிறுவன பெயரில் 3ம் பிரதிவாதி நிறுவன தொழில் விலாசத்திலேயே புதிதாக ஒரு கூட்டாண்மை ஒப்பந்தம் ஏற்படுத்தி 20.12.2014 ல் பதிவு சான்று ஆவணம் பெற்று தொழில் ஆரம்பித்தேன் என்றால் 1ம் வாதி வங்கிகளுக்கும் மற்ற நிறுவனங்களுக்கும் கடிதம்

கொடுத்து வங்கி கணக்கை நிறுத்திவைத்து விட்டார். காரணம் பங்குதாரருக்கு இடையே ஆன பிரச்சனையினால் நிறுத்திவிட்டார் என்றால் ஆமாம்.

6. 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்கான டின் நம்பர் பெற்றுள்ளார்கள் என்றால் அது தெரியவில்லை. 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்கான டின் நம்பர் 33662324964 என்றால் தெரியாது. வா.த.சா 4 ல் 13.6.2013 ல் நானே கையெழுத்து செய்து 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்கான டின் நம்பரை குறிப்பிட்டு இன்வாய்ஸ் வழங்கியுள்ளேன் என்றால் கையெழுத்து என்னுடையது தான். அது எப்போது செய்தேன் என்பது ஞாபகம் இல்லை. 8.1.2014 ல் Bloom knit Finishers என்ற பெயரில் ஆரமித்த தனிநபர் ஸ்தாபனதிற்கான டின் நம்பரும் 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்கான டின் நம்பரும் ஒன்று தான் என்றால் ஆமாம். சிசிபியில் இருந்து ஆவணம் கொடுத்த பின்னர் தான் தெரியவந்தது. 20.12.2014 ல் 3ம் பிரதிவாதி நிறுவன தொழில விலாசத்தில் நானும் 1ம் பிரதிவாதியும் ஒரு கூட்டாண்மை ஒப்பந்தம் ஏற்படுத்தி Bloom knit Finishers என்னும் பெயரில் ஆரமித்த தொழிலும் 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்கான டின் நம்பரையே நான் உபயோகப்படுத்தி தொழில் செய்தோம் என்றால் ஆமாம்.

7. 8.1.2014 ல் Bloom knit Finishers என்ற பெயரில் ஆரமித்த தனிநபர் ஸ்தாபனதிற்கான பதிவு தமிழ்நாடு தொழில் வணிக துறையில் 3301211–30151 எனும் எண்ணில் வாங்கினேன் என்றால் ஆமாம். மேற்படி பதிவு எண் அடிப்படையாக வைத்து திருப்பூர் தென்னம்பாளையம் அலகாபாத் வங்கியில் ஒரு வங்கிக்கணக்கு ஆரமித்தேன் என்றால் ஆமாம். மேற்படி வங்கிக் கணக்கு 50186891503 என்றால் வங்கி கணக்கு புத்தகத்தை பார்த்து தான் சொல்ல முடியும். எனக்கு Bloom knit Finishers வங்கி கணக்கு எண் தெரியும் என்றாலும் தற்போது வங்கி கணக்கு புத்தகத்தை பார்த்தான் சொல்ல முடியும் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் ஒரு கூட்டாண்மை ஒப்பந்தம் ஏற்படுத்தி Bloom knit Finishers என்னும் பெயரில் ஆரமித்த நிறுவனத்திற்கும் திருப்பூர் ஐசிஐசிஐ வங்கியில் ஒரு வங்கி கணக்கு ஆரமித்தோம் என்றால் ஆமாம். வாதிகள் அலகாபாத் வங்கி கணக்கை நிறுத்திவைத்துவிட்டதால் வேறு வங்கியில் ஆரமித்தோம். காரணம் பங்குதாரருக்கு இடையே ஆன பிரச்சனையினால் நிறுத்திவிட்டார் என்றால் ஆமாம். நானும் என்னுடைய மனைவியும் ஆன 1ம் பிரதிவாதி ஆரமித்த தமேற்சொன்ன இரண்டு வங்கிக்கணக்குகளில் 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்க வந்த காசோலைகலை சுமார்

ரூ1.75 கோடி அளவிற்கு ரொக்கமாக்கி கொண்டேன் என்றால் இல்லை மேற்படி தொகை மூலம் நிறுவனத்திற்கு தான் செலவு செய்தோம். இந்த வழக்கில் வாதிகள் தாக்கல் செய்துள்ள பதில் வழக்குரையை பாரா 8 யை படித்துப்பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் அதில் உள்ள விவரங்களை மறுக்கவில்லை என்றால் ஆமாம்.

8. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் வா.த.சா 10 ன் கீழ் என் மனைவி 7.10.2014 ல் வாதிகளுக்கு எதிராக கொடுத்த புகாரை காவல் துறை விசாரிக்கவில்லை என நான் சொல்லியிருப்பது பொய் என்றால் சரியாக விசாரிக்கவில்லை. மேற்படி புகாரை காவல் ஆணையாளரிடம் கொடுத்தேன் என்றால் ஆமாம். அதற்கு முன்னர் 1ம் வாதி 1ம் பிரதிவாதிக்கு எதிராக 2.7.2014 ல் காவல் ஆணையாளரிடம் புகார் கொடுத்து இருந்தார் என்றால் ஆமாம். மேற்படி இரண்டு புகார்களையும் விசாரிக்கான திருப்பூர் தெற்கு காவல் நிலையத்திற்கு அனுப்பிவிட்டார்கள் என்றால் ஆமாம்.எங்களது புகார் கமிசர் அலுவலகத்தில் 885 என்ற எண்ணில் எடுக்கப்பட்டிருந்தது என்றால் ஆமாம். அதேபோல் 1ம்வாதி கொடுத்த புகார் 422 என்ற எண்ணில் எடுக்கப்பட்டிருந்தது என்றால் ஆமாம். சிவில் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள் என்றால் அது தெரியவில்லை. அதில் திருப்தி அடையாமல் தான் குற்றவியல் நீதிதுறை நடுவர் நீதிமன்றத்தில் தனிபுகார் கொடுத்தேன் என்றால் என்ன விவரம் என்பது தெரியவில்லை என்பதால் கொடுத்தேன். மீண்டும் மேற்படி புகாரை விசாரித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு குற்றவியல் நீதிதுறை நடுவர் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தார் என்றால் ஆமாம்.

9. இந்த வழக்கில், என்னுடைய மனைவி, கனேசன் மற்றும் பழனிசாமி ஆகியோர் குற்றவியல் பல்வகை மனு எண் 4378/2015 எனும் எண்ணில் தாக்கல் செய்த இருந்த பிரமாண பத்திர சான்றிட்ட நகல்களை பி.த.சா 8 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி பி.த.சா 8 ல் என்னுடைய மனைவி தானும் 1ம் பிரதிவாதியும் மட்டுமே 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் பங்குதாரர்கள் என பிரமாணம் செய்து குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆமாம். கனேசன் என்பவர் பிரமாண வாக்குமூலத்திலும் 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் தான் 1.2.2008 ல் 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் பங்குதாரர்கள் என பிரமாணம் செய்து குறிப்பிட்டுள்ளார் என்றால்

ஆமாம். அதேபோல் பழனிசாமியும் பிரமாண வாக்குமூலத்திலும் 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் தான் 1.2.2008 ல் 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் பங்குதாரர்கள் என பிரமாணம் செய்து குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.